[1975 நவம்பர் 6

புதிய நெல் வகைகள்.

* 221 வினா—திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1974-75-ல் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட நெற்பயிர்களின் வகைகள் என்ன?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : 1974-75 ஆம் ஆண்டில் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட நெற்பயிர்களின் வகைகள் பின்வருமாறு :—

(1) ஆடுதுறை 30.

(2) ஆடுதுறை 31.

(3) கோயம்புத்தூர் 38.

(4) கோயம்புத்தூர் 39.

திரு. கா வேழவேந்தன் : தலைவரவர்களே, 1974-75-இல் புதிய ரக நெல் விதைகள் எவை எவை வெளியிடப்பட்டிருக்கின்றன? அவைகளுக்குப் பெயர்கள் இடப்பட்டிருக்கின்றனவா? இந்த புதிய நெற்பயிர்களை விளம்பரப்படுத்துவதற்கு திரைப் படங்களில் ஸ்லைடுகள் போட்டுக் காட்டுவதற்கும், பிரச்சாரம் செய்வதற்கும் வழிவகைகள் ஏதேனும் செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, பிரச்சாரம் நடந்து வருகிறது. ஆனால் இப்போது அறிமுகப் படுத்தப்பட்டுள்ள நெற்பயிர்களின் ரகங்களுக்குத் தனித் தனி குணம் இருக்கிறது. அதை அனுசரித்து எந்தெந்த மாவட்டங் களில் அதை பிரச்சாரம் செய்ய வேண்டுமோ அப்படிச் செய்ய வேண்டும். ஆடுதுறை 30 என்பது 85 நாள் பயிர். ஆடுதுறை 31 என்பது 103 நாள் பயிர். கோ. 38 என்பது நீண்ட நாள் பயிர்—145 நாள். இது கோவை மாவட்டத்தில் பரப்பப்பட்டு வருகிறது. அங்கே இதற்கு நல்ல விளைச்சல் காணப்படுகிறது. கோ. 39 மூன்று மாதப் பயிர். இதிலும் நல்ல விளைச்சல் இருக்கிறது.

1975 நவம்பர் 6]

THIRU B. VENKATASWAMY: Sir, may I know from the Hon Minister the total acreage under CO.38, CO.39, ADT. 30 and ADT 31 in the entire State. Also, whether these are better strains than ADT-27, IR-8 and IR-21?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவரவர்களே, மொத்தம் எவ்வளவு நிலப்பரப்பில் இந்தப் புதிய ரகங்கள் இதுவரை பரப்பப்பட்டுள்ளன என்ற கேள்விக்கு என் கையில் உடனடியாகப் பதில் இல்லை. அதுபற்றி தகவல் சேகரித்து கொடுக்க முடியும்.

ஆனால் இவைகள் எல்லாம் புது ரகங்கள். இவைகளைத் தீவிர மாகப் பரப்ப ஏற்பாடுகள் நடக்கின்றன. குறிப்பாக, ஆடுதுறை 31 என்பது 103 நாள் பயிர். எல்லா மாவட்டங்களிலும் நன்றாக விளைகிறது. தஞ்சை மாவட்டத்தில் மட்டும் ஒரு ஏக்கருக்கு 3 டன் விளையக் கூடும். திரு. அழகர்சாமி அவர்கள் தலையில் கையைத் தூக்கிவைத்துக் கொண்டிருக்கிறார்கள். நெல்லை மாவட்டத்தில் 4 டன், செங்கற்பட்டில் 4¼ டன் வரையில் விளைவித்துக் காட்டியிருக்கிறார்கள். ஆனால் அந்த ஆடுதுறைப் பயிரை கார் காலம் குறுவை சீசனில்தான் பயிரிட முடிகிறது. செங்கற் பட்டு, வட ஆற்காடு ஆகிய மாவட்டங்களில் நவரைப் பட்டங் களில் பயிர் செய்ய முடிகிறது. கூடிய விரைவில் எல்லாப் பகுதி களிலும் பரப்பப்படும்.

திரு. அ. ஆறுமுகம்: ஆடுதுறை 30, 31 என்ற பெயரை மாற்றி, பழங்காலத்துத் தமிழர்களுடைய பெயரை வைப்பதற்கு அல்லது தமிழ்ச் சொல்லை வைக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: இது ஆலோசிக்கப்பட வேண்டிய காரியம். பார்க்கலாம் என்றுதான் நான் பதில் சொல்ல முடியும்.

திருமதி த. ந. அனந்தநாயகி: சபாநாயகர் அவர்களே, கனம் அமைச்சரவர்கள் பொறுப்பேற்ற பிறகு, குறைந்த உரம், குறைந்த தண்ணீர் உபயோகித்து, ஆனால், அதிக விளைச்சல் தரக்கூடிய ஏதாவது விதைகளைக் கண்டுபிடிக்க முயற்சி எடுத் திருக்கிறார்களா? அப்படிக் கண்டு பிடிக்கப்பட்ட விதைக்கு அவருடைய பெயர் வைக்கப்படுமா?

[1975 நவம்பர் 6

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : ஒன்றுமட்டும் நிச்சயமாக என்னால் சொல்ல முடியும் என்னுடைய பெயரை எந்த விதைக்கும் வைக்கக் கூடாது என்றே நான் சொல்லியிருக்கிறேன். முன்னால் கூட்டுறவுத் துறையின் பொறுப்பிலிருந்தபொழுது கூட பல இடங்களில் என் படத்தைத் திறக்கப்போகிறோம் என்று சொன்னார்கள். தென்னாற்காடு, புதுக்கோட்டை, நெல்லை போன்ற பல மாவட்டங்களில் திறக்கக் கூடாது என்று சொல்லி இருக்கிறேன். தந்தியடித்துக்கூட நிறுத்தியிருக்கிறேன். உண்மையிலே இதிலே ஏதாவது திறமை, பெருமையிருக்கிறதென்றால் அது இந்த அமைச்சரவையின் தலைமைப் பொறுப்பையேற்றிருக்கிற முதலமைச்சரைச் சாரும் என்ற காரணத்தினால் என்னுடைய பெயரை எதற்கும் வைப்பதில்லை.

திரு. எஸ். நல்லசாமி : தலைவரவர்களே, இந்த உயர் விளைச்சல் நெல் உற்பத்தி செய்யக்கூடிய சமயத்தில் அதற்கு விளக்கமான அட்டைகளைக் கொடுக்க வேண்டும். குறிப்பாக, ஆடுதுறை 31 விவசாயம் பண்ணக்கூடிய விவசாயிகள் என்று எடுத்துக் கொண்டால் அவர்கள் வீட்டிலே எந்தெந்த காலத்திலே, என்னென்ன உரங்களை இடவேண்டுமென்ற விவர அட்டைகளை அவரவர்கள் பண்ணையிலே வைப்பதற்கு அரசே அட்டைகள் செய்து கொடுக்க ஏற்பாடு செய்யுமா? அந்த அட்டையில் கையெழுத்திடக்கூடிய அளவுக்கு விவசாய ஆஃபீஸில் இருந்து அதிகாரிகள் வந்து பார்வையிட ஆட்கள் அமர்த்தப்படுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : இந்த ஆடுதுறை 31 விதை வெகு வேகமாகப் பரப்பப்படுகிறது. ஆனால், பரவலாக எல்லாமாவட்டங்களிலும் கேட்பவர்களுக்கெல்லாம் கொடுக்கக் கூடிய அளவுக்கு இன்னும் பெருக்கப்படவில்லை. ஆகவே, ஆடுதுறை 31 வைத்திருக்கக்கூடிய இடத்தில் எல்லாம் அட்டை கொடுக்கக்கூடிய நிலையில்லை. அடுத்த குறுவைப் பருவத்தில் கேட்பவர்களுக்கெல்லாம் இதனைக் கொடுக்கமுடியும் என்ற நிலை வரும்போது, விளக்க அட்டை செய்து கொடுக்கமுடியும். தாளடிக்கோ, சம்பாவுக்கோ நல்ல விளைச்சல் தரக்கூடியதாக இது இல்லை. இது நீண்ட காலப் பயிர் அல்ல. ஆகவே, அடுத்த

குறுவைக்கு முன்னால் இதனை தேவையான அளவு அளிக்க, பிரச்சாரம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்ற உறுதியைச் சொல்ல முடியும்.

திரு. க. உரொ. எட்மண்ட் : நம்முடைய மாண்புமிகு விவசாயத் துறை அமைச்சரவர்கள் தான் கூட்டுறவுத் துறையிலேயிருந்த போது, தன்னுடைய படம் வைக்கக்கூடாது என்று . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தக் கேள்வி நெல் விதையைப் பற்றியது. அவருடைய படத்தைப் பற்றியதல்ல.

விதை நெல்லின் விலை.

*** 222. வினா—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

விவசாயிகளுக்கு வழங்கப்படும் விதை நெல்லின் விலை குறைக்கப்பட வேண்டுமென கிழக்கு இராமநாதபுரம் மாவட்ட வளர்ச்சி மன்றம் அண்மையில் அரசை வேண்டியுள்ளதா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, இராமநாதபுரம் மாவட்ட வளர்ச்சிமன்றத்தில் இருந்து அரசுக்கு எந்தக் கோரிக்கையும் வரவில்லை. ஆனால், திருவாடானை பஞ்சாயத்து யூனியன் பெருந் தலைவர், காளையார் கோயில் பெருந் தலைவர் ஆகியோர் கோரி இருந்தார்கள். இப்பொழுது விற்கப்படுகின்ற நெல் விதை, லாப நோக்கம் இல்லாத விலைக்குத் தான் விற்கப்படுகிறது. அதை மேலும் குறைப்பதற்கில்லை.

திரு. சோ. அழகர்சாமி : தலைவரவர்களே, இப்பொழுது ஒரு ஏக்கருக்கு ஏறக்குறைய 30 கிலோ நெல் தேவைப்படும். அதை இராமநாதபுரம் மாவட்டத்திலே கிழக்குப் பகுதியிலே மழை வந்தவுடனே விதைப்பார்கள். மறுபடியும் மழை வரும்போது திரும்ப விதைப்பார்கள். ஒரு கிலோ நெல் ரூ. 3-க்கு விற்கப்படுவதாகச் சொல்லப்படுகிறது. நியாயமான விலை ஒரு கிலோவுக்கு ரூ. 1 தானிருக்க வேண்டும். விதையென்றால் ரூ. 1½ என்றிருக்கலாம். ஆகவே, அரசாங்கமே தேவையான விதைகளைத் தயார் பண்ணி, குறைந்த விலைக்குக் கொடுக்க ஏற்பாடு செய்யுமா ?